# திருநெல்வேலி மண்டலம்

# விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

# 2022–23 ஆம் ஆண்டு

# நிர்வாக அறிக்கை

# விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

# 2022–23 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. ஆட்சி எல்லை

இந்நகராட்சி ஆட்சி செலுத்தும் விக்கிரமசிங்கபுரம் நகரம் மேற்கு தொடர்ச்சி பொதிகை மலையடிவாரத்தில் எழில்மிகு தாமிரபரணி நதி உற்பத்தியாகும் இடத்தின் அடிவாரத்தில் **6** வது வார்டு கீழரத வீதியில் கதவு இலக்கம் **9** ல் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் வருவாய் கிராமங்கள் பகுதி I மற்றும் பகுதி II ஆக இருந்து வருகிறது. இந்நகர் வளர்ச்சியடைந்து தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து, பின்னர் இரண்டாம் நிலை நகராட்சியாக அரசு ஆணை எண் **154** நாள் **09.08.2010** ன் படி உயர்ந்து இருக்கிறது.

<u>அமைப்பு</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் மொத்த நகர பரப்பளவு **38.57** சதுர கிலோ மீட்டர் ஆகும்.

**இந்நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி குக்கிராமங்கள் அமைந்துள்ளது.**

- அகஸ்தியர்புரம்
- வடமலை சமுத்திரம்
- முதலியார்பட்டி
- கொண்டபையன் பட்டி
- கோட்டைவிளை பட்டி
- அய்யனார்குளம்
- அனவன்குடியிருப்பு

<u>மக்கள் தொகை</u>

**2011** ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரத்தின் மொத்த மக்கள் தொகை **47,241** ஆகும். இதில் ஆண் **22,955** மற்றும் பெண் **24,286** ஆகும். தற்போதுள்ள மக்கள் தொகை 48399 ஆகும்.

2022–23 ம் நிதியாண்டு முழுமையாகவும், தற்போதுவரையும் கீழ்க்கண்டவாறு ஆணையாளராக பணியாற்றி வருகிறார்.

| | | |
|---|---|---|
| திரு,க.சு.கண்மனி | ஆணையாளர் | 29.11.2021 முதல் 31.03.2023 முடிய |

<u>வார்டு பிரிவின் செயல்முறை</u>

நகர்ப்பகுதிகளில் கடந்த பத்தாண்டுகளாக உள்ளாட்சி தேர்தல் நடைபெறாததால், அரசு உத்திரவின்படி, ஆணையாளர் அவர்கள் தனிஅதிகாரியாக நியமனம் செய்யப்பட்டு, மன்றக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தது. பின்னர்

இந்நகராட்சி **21** நகரமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க **19.02.2022** ல் நகரமன்ற தேர்தல் நடைபெற்று **02.03.2022** ல் **21** வார்டு புதிய நகரமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்றனர். 04.03.2022 அன்று நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்றத் துணைத் தலைவர்களுக்கான மறைமுகத்தேர்தல் நடைபெற்று 21 வார்டு நகர்மன்ற உறுப்பினர்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டனர்.

வார்டு எண் **10** ஆதிதிராவிடர் பெண்ணுக்கும் வார்டு எண் 4 ஆதிதிரவிடர் பொது மற்றும் **2, 3,5, 6, 8, 11,13,14,15,17** ஆகிய **10** வார்டுகள் பெண்களுக்காக (பொ)வும் ஒதுக்கப்பட்டது.வார்டு எண் 1,7,9,12,16,18,19,20,21 ஆகிய **10** வார்டுகள் ஒதுக்கப்படவில்லை.

நகர்மன்ற தலைவர் – **திரு. S.P.M.** செல்வசுரேஷ்பெருமாள்(20 வது வார்டு உறுப்பினர்)

நகர்மன்ற துணைத்தலைவர் **திருமதி.சி. திலகா** (8 வது வார்டு உறுப்பினர்)

| உறுப்பினர்கள் | | வார்டு எண் |
|---|---|---|
| திருமதி. ஹ . கிறாஸ்இம்மாக்குலேட் | ..................... | 1 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி ம. வனிதா | ........................ | 2 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி சொ. வினோதினி | ........................ | 3 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி ர. செல்வகுமாரி | ........................ | 4 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி த. சுப்புலெட்சுமி | ........................ | 5 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி மு. மீனாகுமாரி | ........................ | 6 வது வார்டு உறுப்பினர் |
| திரு சொ. இசக்கி | ........................ | 7 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி சி. திலகா | ........................ | 8 வது வார்டு உறுப்பினர் |
| திரு இ. யேசுராஜா | ..................... | 9 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி வி. அருள்மணி | ........................ | 10வது வார்டு உறுப்பினர் |
| திருமதி எஸ்.ராமலெட்சுமி | ........................ | 11 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி ஜெ.சுஜாதா | ........................ | 12 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி ஆர்.சாரதா | ........................ | 13 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி வே.வைகுண்டலெட்சுமி | ..................... | 14 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி ஷா.கௌசர் ஜான் | ........................ | 15 வது வார்டு உறுப்பினர் |
| திரு பொ. பரமசிவன் | ........................ | 16 வது வார்டு உறுப்பினர் |
| திருமதி எஸ்.சுந்தரி | ........................ | 17 வது வார்டு உறுப்பினர் |
| திரு மு கணேசன் | ........................ | 18 வது வார்டு உறுப்பினர் |
| திரு. ஞ . விக்னேஷ் | ........................ | 19 வது வார்டு உறுப்பினர் |
| திரு. **S.P.M.** செல்வசுரேஷ்பெருமாள் | ............... | 20 வது வார்டு உறுப்பினர் |
| திரு. பொ.சுடலைமாடன் | ........................ | 21 வது வார்டு உறுப்பினர் |

**கூட்டங்கள் (2022–23)**

அறிக்கையாண்டில் நகரமன்ற தலைவர் அவர்களால் கீழ்க்கண்டவாறு மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாதாரணக் கூட்டங்கள் | 12 எண்ணம் | **264** பொருட்கள் |
| 2. | அவசரக் கூட்டம் | 2 எண்ணம் | 2 பொருட்கள் |

அனைத்து சாதாரண மற்றும் அவசரக்கூட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. எந்த தீர்மானமும் ஒத்திவைக்கப்படவோ, நிராகரிக்கப்படவோ இல்லை.

<u>குழுக்கள்</u>

தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்றத்தில் கீழ்க்குறிப்பிட்ட குழுக்கள் செயல்பட்டன.

**கூட்டங்களின் விபரம்** **முடிவு செய்யப்பட்ட பொருட்கள்**

1. நியமனக்குழு – –
2. வரிமேல் முறையீட்டுக் குழு –
3. ஒப்பந்தக்குழு –

தேர்வு செய்யப்பட்ட நகரமன்ற உறுப்பினர்களில் **31.03.2022** அன்று திருமதி. மு.மீனாகுமாரி என்பவர் நியமனக்குழு உறுப்பினராகவும் திருமதி. ஆர்.செல்வகுமாரி, திருமதி.எஸ்.சுந்தரி, திருமதி.ஷா..கௌகர்ஜான் திரு.இ..யேசுராஜா ஆகியோர்கள் வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர்களாகவும் திருமதி.ஆர்..சாரதா என்பவர் ஒப்பந்தக்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

<u>நகராட்சி பணியாளர்கள் விபரம்</u>

<u>அரசாணை நிலை எண் 10 நாள் 23,01.2023 ன் படி பணியிட விவரங்கள்</u>

| பதவி | அனுமதிக்க பட்ட பணியிடம் | தற்போது பணிபுரியும் பணியாளர்கள் | காலி பணியிடம் | கூடுதல் பணியிடம் |
|---|---|---|---|---|
| நகராட்சி பொறியாளர் | 1 | 0 | 1 | |
| நகரமைப்பு ஆய்வர் | 1 | 0 | 1 | |
| மேலாளர் | 1 | 1 | 0 | |
| உதவியாளர் | 1 | 1 | 0 | |
| கணக்கர் | 1 | 0 | 1 | |
| இளநிலை உதவியாளர் | 5 | 4 | 1 | |
| வருவாய் ஆய்வாளர் | 1 | 1 | 0 | |
| வருவாய் உதவியாளர் | 3 | 7 | 0 | 4 |
| பதிவறை எழுத்தர் | 1 | 0 | 1 | |
| புள்ளி விபரக் குறிப்பாளர் | 0 | 1 | 0 | 1 |
| ஓட்டுநர் | 1 | 1 | 0 | |
| அலுவலக உதவியாளர் | 3 | 1 | 2 | |
| இரவுக் காவலர் | 1 | 1 | 0 | |
| பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | 0 | |

| | | | | |
|---|---|---|---|---|
| பணி ஆய்வாளர் | 2 | 0 | 2 | |
| படவரைவாளர் | 1 | 0 | 1 | |
| களப்பணி உதவியாளர் | 1 | 0 | 1 | |
| மின் பணியாளர் நிலை – II | 5 | 3 | 2 | |
| தெருவிளக்கு உதவியாளர் –1 | 1 | 1 | 0 | |
| குழாய் ஆய்வாளர் | 0 | 1 | 0 | 1 |
| வடிகட்டி படுகை இயக்குநர் | 1 | 1 | 0 | |
| மீட்டர் ரீடர் | 1 | 0 | 1 | |
| குடிநீர் திட்ட இரவு காவலர் | 3 | 2 | 1 | |
| சுகாதார ஆய்வாளர் | 1 | 1 | 0 | |
| சுகாதார மேற்பார்வையாளர் | 4 | 3 | 1 | |
| மினிலாரி ஓட்டுநர் | 2 | 2 | 0 | |
| சுகாதாரப் பணியாளர்கள் | 66 | 41 | 25 | |
| துலக்குநர் | 2 | 0 | 2 | |
| உதவியாளர் (குடிநீர்) | 3 | 3 | 0 | |
| பொருத்துநர் | 3 | 2 | 1 | |
| **மொத்தம்** | **117** | **79** | **44** | **6** |

தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 10 நாள் 23.01.2023 ன்படி நகராட்சிகளின் நிலைக்கேற்ப பணியிடங்கள் திருத்தி அமைக்கப்பட்டு 31 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே உள்ள அரசாணை பத்தி 10 (ஸ) முதல் (ஸை) வரை நிபந்தனைகளின் படி அரசாணை வரப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களின் விதி 2023 உருவாக்கப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பின்பற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>பேரூந்து நிலையங்கள்</u>

இந்நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேரூந்து நிலையம் இல்லை. பேரூந்து நிலையம் அமைக்க நகராட்சி பகுதியில் போதுமான இடவசதி இல்லை. திருநெல்வேலி மாவட்ட அட்சித் தலைவர் அவர்களின் செய்லமுறை உத்திரவு ந.க.எண் ஜி2/9907/22 நாள் 26.03.2022 ன் படி பகுதி கிராமம் ஐஐ புல எண் 905/4 மற்றும் 903/2 தோப்பு புறம்போக்கு நிலத்தினை விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் புதியதாக வாகனக் காப்பகம் அமைக்க ரூ.14.90 கோடிக்கு மதிப்பீடு மற்றும் திட்டக்கருத்துரு தயார் செய்யப்பட்டு பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

<u>நகராட்சியின் பலவகை ரோடுகளும், அவைகளின் நீளம் விபரங்கள் பின்வருமாறு</u>

| | | |
|---|---|---|
| 1. | மண் ரோடுகள் | **2.079** கி.மீ. |
| 2. | பேவர்பிளாக் சாலைகள் | **43.511** " |
| 3. | தார் ரோடுகள் | **33.9205** " |
| 4. | சிமெண்ட் கான்கீரிட் ரோடுகள் | **11.095** " |
| | மொத்தம் | **90.6056** கி.மீ. |

வாறுகாலின் நீளம் **59.332** கி.மீ

மேற்காண் சாலைகளின் நீளம் **31.03.2023** முடிய உள்ள காலங்கள் வரை உள்ளதாகும்.

இந்நகராட்சி பகுதியில் பள்ளமான இடங்கள் உள்ள தெருக்களில் சரள், மண் போட்டு பள்ளத்தை உயர்த்துதல், கல் பதித்து செப்பனிடுதல், தார் மேற்பரப்பு போடுதல் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் இது போன்ற ரோடு பராமரிப்பு பணிகள் நடப்பு ஆண்டில் செலவிடப்பட்ட தொகைகள் கீழ்கண்ட விபரப்படி திட்டம் வாரியாக இந்நகராட்சி பகுதிகளில் செவ்வனே செயல்படுத்தப்பட்டுள்ளது.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT)2022–23**

இத்திட்டத்தில் **162.00** லட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியில் உள்ள பந்தல்காரன் குளம், பணிச்ச நயினார் குளம் மற்றும் இளந்தைகுளம் மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடையினை, எல்பிஜி தகன மேடையாக மேம்பாடு செய்து, சுற்று சுவர் அமைக்கும் பணி ரூ.**85.00** இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நமக்கு நாமேத் திட்டம் (NNT )**

நமக்கு நாமே திட்டம் **2021–22** ன் கீழ் இந்நகராட்சி பகுதி தலையணை செல்லும் சாலையில், தாமிரபரணி ஆற்றங்கரையில் புதியதாக படித்துறை அமைக்கும் பணி ரூ.**29.15** இலட்சம் மதிப்பீட்டில் (பொது மக்கள் பங்களிப்பு **9.61** இலட்சம்) செய்து முடிக்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டம் **2022–23** ன் கீழ் சிவந்தியப்பர் கோவில் முன், கருத்தையாபுரம் மற்றும் வடமலை சமுத்திரம் பகுதியில் சோலர் வசயடைன் கூடிய உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி ரூ. **20.00** இலட்சம் மதிப்பீட்டில் ( பொது மக்கள் பங்களிப்பாக ரூ.**6.60** இலட்சம்) பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அகஸ்தியர்புரம் பகுதியில் ரூ.**15.00**

இலட்சம் மதிப்பீட்டில் (பங்களிப்பு தொகையாக ரூ.4.95 இலட்சம்) 90 எம்எம் பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் பதித்துபேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 4 எண்ணம் பேட்டரி ஆப்ரேட்டட் வாகனம் கூடிடீஏ கொள்முதல் செய்ய, மதுரா கோட்ஸ் நிறுவனம் பங்களிப்பின் படி தொகை ரூ.4.08/– இலட்சம் 51 சதவிகிதம் பெறப்பட்டு, ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பங்களிப்புதாரர் மூலமே கொள்முதல் செய்ய கொள்முதல் உத்திரவு வழங்கிய நிலையில் உள்ளது.

**15வது நிதிக்குழு மான்யத் திட்டம் ( 15th CFC)**

15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 2021–22 ருசூ கூஐநுனு நிதியின் கீழ் ரூ.17.385 இலட்சத்திற்கு புதிய எல்இடி தெரு விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 2022–23 ன் கீழ் மக்கள் நலவாழ்வு மையம் அமைக்கும் பணி ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக TIED நிதியின் கீழ் ரூ.14.60 இலட்சத்திற்கு 2 எண்ணம் Light Commercial Vehicle மற்றும் ரூ.36.00 இலட்சத்திற்கு 18 எண்ணம் Battery Operated Vehicle கொள்முதல் செய்யம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 2022–23 UN TIED நிதியின் கீழ் சுமார் 1.679 கி.மீ தூரத்திற்கு தார் சாலை மேம்பாடு செய்யும் பணி ரூ. 69.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அம்ரூத் 2.0 திட்டம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 159 நாள் 08.11.22 ன் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணி மேற்கொள்ளுதல் வேண்டி ரூ.29.51 கோடி (GOI Share 14.76 + GOTN Share 8.85 + ULB Share 5.90) நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்**

இத்திட்டதின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 7 பள்ளிகளில் பயிலும் 209 குழந்தைகளுக்கு (1 முதல் 5 ம் வகுப்பு வரை) காலை உணவு வழங்கும் பொருட்டு, இந்நகராட்சி அய்யனார்குளம் பகுதியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**State Urban Infra structurtre Development Fund**

இத்திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் உள்ள **1939** எண்ணம் தெருவிளக்குகளையும், எல்இடி தெருவிளக்குகளாக மாற்றம் செய்ய வேண்டி ரூ. **191.99** இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பபட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தூய்மை இந்தியா திட்டம் SBM 2.0**

இத்திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் **2021–22** மற்றும் **2022–23** ஆம் ஆண்டில் முறையே **41** எண்ணம் மற்றும் **40** எண்ணம் ஆக மொத்தம் **81** எண்ணம் கழிப்பிட வசதி இல்லாதவர்கள் கண்டறியப்பட்டு, தணிநபர் கழிப்பிடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான மத்திய அரசு மற்றும் மாநில அரசு மான்யத் தொகையாக ரூ. **6667/–** (ஒரு நபருக்கு) மற்றும் நகராட்சி பங்கத் தொகையாக ரூ.**2667/–** ம் சேர்த்து ரூ.**9334/–** வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகர் பகுதியில் சேகரமாகும் குப்பைகளில் இருந்து பிரித்து எடுக்கப்படும் உலர்கழிவுகளை சேகரிக்க வேண்டி ஆயவநசயைட Recovery Facilities Centre ரூ. **43.00** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சித்திட்டம் 2022–23**

இத்திட்டத்தில் **58.00** லட்சம் மதிப்பீட்டில் அங்கன் வாடி கட்டிடம் **1**, ரேசன் கடை **1**, பேவர் பிளாக் சாலை **1** எண்ணம் மற்றும் நண்மை கூடம் **1** எண்ணம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

**வணிக வளாக கட்டிடங்கள்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில், நகராட்சி அலுவலகம் அருகே வணிக வளாக கட்டிடங்கள் அமையப்பெற்றுள்ளது. மேற்கண்ட வணிக வளாகத்தில் **52** கடைகள் உள்ளன. அதில் நடப்பு ஆண்டில் **30** கடைகள் மட்டும் குத்தகைக்கு விடப்பட்டு இருந்த நிலையில் **25.01.2023** அன்று பயன்பாட்டில் இல்லாத கடைகளுக்கான ஏலம் விட நடவடிக்கை மேற்கொண்டு மேலும் **3** கடைகள் ஏல விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு வாடகையாக ரூ. **7,4000 /–** வசூல் செய்யப்பட்டது.

**தெரு மின் விளக்குகள்**

தமிழ்நாடு மின்வாரியம் நகராட்சி மின்சார கம்பிகள் போடப்பட்டுள்ளன. எல்லா தெருக்களுக்கும் மின்விளக்குகள் ஒளிரவிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. நடப்பு

ஆண்டு வரை தெருக்களில் ஒளிரவிட்டு பராமரிக்கப்பட்ட விளக்குகளின் எண்ணிக்கை **1891** ஆகும். விளக்குகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு

**(2022–23)**

| | | | |
|---|---|---|---|
| 1. | சோடியம் ஆவி விளக்குகள் | – | 91 |
| 2. | 96 வாட்ஸ் ஊகுடு விளக்குகள் | – | 545 |
| 3. | 40 வாட்ஸ் சூழல் விளக்குகள் | – | 1244 |
| 4. | முபைா ஆயளவ விளக்குகள் | | 11 |
| | மொத்தம் | – | 1891 |

அவ்வப்போது தேவையான இடங்களில் புதியதாக மின் விளக்குகள் அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.மேலும் அனைத்து தெருவிளக்குகளையும் டுநுனு மின் விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி SUIDF திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பள்ளிகளின் எண்ணிக்கை**

இந்நகராட்சி எல்லைக்குள் கீழ்கண்ட விபரப்படி கல்லூரி மற்றும் பள்ளிகள் உள்ளன.

1. திருவள்ளுவர் கல்லூரி – **1** எண்ணம்
2. நடுநிலைப்பள்ளி – **2** “
3. தொடக்கப்பள்ளி – **5** “
4. உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி – **1** “
5. தனியார் பள்ளிகள் – **9**

இந்நகர் பகுதிகளில் பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பின் கீழ் செயல்பட்டு வந்த , கீழ்க்கண்ட விவரப்படியான பள்ளிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்செயல்முறை உத்திரவு ந.க.எண் ஙு7/35599/2022 நாள் 24.04.2023 ன் படி, இந்நகராட்சி வசம் ஒப்படைகக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | சன்னதி தெரு நடுநிலைப்பள்ளி |
| 2 | அனவன்குடியிருப்பு தொடக்கப்பள்ளி |
| 3 | அய்யனார்குளம் தொடக்கப்பள்ளி |
| 4 | காரையார் தொடக்கப்பள்ளி |
| 5 | சேர்வலார் தொடக்கப்பள்ளி |
| 6 | லோயர் டேம், நடுநிலைப்பள்ளி |

**நூலகங்கள்**

நூலக ஆணைக்குழுவினரால் நகரில் மேல ரத வீதியில் கிளை நூலகம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

சொத்துவரியில் பொதுக் காரியங்களுக்கான வரியில் ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய்க்கு **0.10** பைசா வீதம் இவ்வாண்டு ரூ. **9,21,775 /–** நூலக வரி வசூலிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியால் நூலக ஆணைக்குழுவிற்கு ரூ. **3,68,372 /–** நூலக வரி தொகை செலுத்தப்பட்டுள்ள

**வாசக சாலைகள்**

இந்நகராட்சிக்குட்பட்ட **12** வது வார்டு சேர்வலார் மற்றும் லோயர் கேம்ப் ஆகிய இரண்டு ஊர்களில் வாசக சாலைகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக அப்பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்களுக்கு போதுமான கல்வி அறிவு கிடைக்கப்பெற்று வருகிறது.

**நகர்ஊரமைப்பு துறை**

இந்நகராட்சியில் அறிக்கையாண்டில் கட்டிட அனுமதி பெறவேண்டி **68** விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் **65** விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **3** எண்ணம் அனுமதி மறுக்கப்பட்டு ள்ளது.

**பொது சுகாதாரம்**

அறிக்கை ஆண்டில் கீழ்குறிப்பிட்ட விபரப்படி சுகாதார ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறார்.

**சுகாதார ஆய்வாளர் – திரு, பொன்வேல்ராஜ்**

**சுகாதார மேற்பார்வையாளர்கள்**

1. திரு.முத்து(எ)மில்லர் — அறிக்கை ஆண்டு
2. திரு. தெட்சினாமூர்த்தி — முழுவதும் பணிபுரிந்து
3. திரு.பரமசிவன் — வந்தனர்.

**16(1)** துப்புரவு

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நவீன கட்டண கழிப்பிடம் **3** எண்ணங்கள் உள்ளன. இவை அனைத்தும் நகராட்சியின் மூலம் முறையே வருடந்தோறும் குத்தகை மூலம் ஏலம் விடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. **4.00** லட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது..

நகரில் **3** பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் **10** சமுதாயகழிப்பிடங்கள் உள்ளன. அவைகள் அனைத்தும் செப்டிக் டாங்குகள் உடன் அமைந்துள்ளது . இந்த நவீன கழிப்பிடங்கள் மின்சார வசதியும், தண்ணீர் வசதியும் செய்யப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**வீடுகளில் உள்ள கழிப்பிடங்கள்**

**(2022–23)**

| | | | |
|---|---|---|---|
| **1.** | நகராட்சியின் மொத்த வரிவிதிப்பு எண்ணிக்கை | – | **22338** |
| **2.** | குடியிருப்பு உள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை | – | **21164** |
| **3.** | மல அறை வசதியுள்ள வீடுகளின் எண்ணிக்கை | – | **18847** |

மேற்கூறிய குடியிருப்புக்கான வீடுகளின் மொத்த எண்ணிக்கையில் மல அறை வசதியுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை **97** ரூ ஆகும்.

இந்நகரில் குடியிருப்பு வீடுகள் என்று சொல்லப்படுகிறவைகளில் பழைய வீடுகள் அதிகம். அவைகள் பெரும்பான்மையான வீடுகள் தனியான வீடுகள் அடங்கியவையாகும். இந்த தனிப்பட்ட வீடுகளில் மொத்தம் **18847** செப்டிக் டாங்க் உள்ளன. தெருக்கள் காலையிலும், மாலையிலும் சுத்தம் செய்யப்படுகின்றன.

**2022–23** ம் ஆண்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர்கழிப்பறை அமைக்க இந்நகராட்சிக்கு **40** எண்ணம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்கண்ட இலக்கு முழுவதும் தனி நபர் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை பணி கள்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் நாள் தோறும் **14.5** மெட்ரிக் டன் குப்பைகள் சேகரமாகிறது. இந்நகராட்சி மூலம் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் வனிக வளாகங்கள் ஆகியவைகளில் உள்ள குப்பைகளை நாள் தோறும் நேரடியாக ஹுடீடீசு வடி ஹுடிடிச ஊடிடடநஉவடைே செய்யப்பட்டு வருகிறது.

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் இராமலிங்கபுரம், அய்யனார்குளம், மற்றும் வடக்கு அகஸ்தியர்புரம் பகதியில் **10** டன் கொள்ளவு கொண்ட நுண்ணுயிர் செயலாக்க மையம் தூய்மை இந்தியா திட்டம் **2018–19**ன் கீழ் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. நகர்ப்புறங்களில் சேகரம் செய்யப்படும் குப்பைகள் இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மூன்று நுண்ணுயிர் செயலாக்க மையத்திற்கு கொண்டு சென்று , **9.2** டன் மக்கும் குப்பைகள் கையாளப்பட்டு, உரம் தயார் செய்து விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு **56** டன் அளவுள்ள உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு வரை ரூ.**16300/–** ரூபாயிக்கு உரம் விற்க்கப்பட்டுள்ளது. மேலும் தலைமைச் செயலாளர்

அவர்கள் தலைமையில் நடைபெற்ற 3வது மாநில உயர்மட்டக்குழு கூட்ட நடவடிக்கையின் படி, சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 3088/2022/தூ.இ.தி1 நாள் 23.02.2023 ன் அறிவுறுத்தியுள்ளவாறு மக்கும் குப்பையில் இருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் செழிப்பு என்ற பெயரில் விற்பனை செய்யும் பொருட்டு, இந்நகராட்சியில் மக்கும் குப்பையில் இருந்து உருவாகும் இயற்கை உரத்தினை கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்சி நிறுவனத்தின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இயற்கை உரம் என சான்று பெறப்பட்டு, செழிப்பு என்ற பெயரில் விற்பனை செய்ய தயார் நிலையில் உள்ளது.

மேலும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி உரக்கிடங்கில் வளம் மீட்பு பூங்கா (RRC) அமைக்கப்பட்டு மறுசுழற்ச்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகளை பைலிங் இயந்திரம் மூலம் பேக்கிங் செய்யப்பட்டு பேப்பர் மேன் என்விரான்மெண்டல் பிரைவட் லிமிட் மூலம் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டுவருகிறது. நடப்பு ஆண்டில் 236 டன் மறுசுழற்ச்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் நுண்ணுயிர் செயலாக்கமையம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கொட்டப்பட்ட கழிவுகளை துாய்மை இந்தியா திட்டம் 2018–19 ன் கீழ் க்ஷஐடீ ஆமைேபே முறை மூலம் ரூ. 165 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு மொத்தம் தேக்கி வைக்கப்பட்ட 25000 கனமீட்டர் குப்பைகள் அகற்றப்பட்டு 5.84 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

**கழிவு நீர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் தலைமையில் 06.09.2021 அன்று தாமிரபரணி ஆய்வுகுழு Subcommitee ஸ்தல ஆய்வின் போது விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் 1. வார்டு 11 டாணா வாய்கால் பாலம் அருகே , 2. வார்டு 11 மேட்டுப்பாளையம் தெற்கு தெரு, 3. வார்டு 11 சிவஞானபுரம் தெரு, 4. வார்டு 13 செயின்ட் மேரீஸ் பள்ளி அருகே, 5. வார்டு 7 கிருஷ்ணன் கோவில் வாய்கால் பாலம், 6. வார்டு 5 வைத்திலிங்கபுரம் நடுத் தெரு, 7. வார்டு 5 வைத்திலிங்கபுரம் மெயின் தெரு, 8. வார்டு 6 மெயின் ரோடு திருமஞ்சன முடுக்கு 9. மீனாட்சிபுரம் தெரு, 10. அருந்ததியார் தெற்கு தெரு 11. வார்டு எண் 2 ஞானியார் தோப்பு மற்றும் 12. வார்டு எண் 2 அம்பலவாணபுரம் ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீர் கோடைமேலழகியான் கால்வாயில் கலக்கும் இடங்களில் கழிவுநீர் மாதிரியினை பகுப்பாய்வு செய்ய அறிவுறுத்தி உள்ளார்கள். அதன் அடிப்படையில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் திருநெல்வேலி அவர்களின் மூலம் மாதிரிகளை சேகரித்து பரிசோதனை செய்ததில் 3 வது வார்டு மீனாட்சிபுரம் மற்றும் 2 வது வார்டு அம்பலவாணபுரம் மற்றும் ஞானியார் தோப்பு ஆகிய 3 இடங்களில் க்ஷடீனு நிர்ணயிக்கப்பட்ட அளவு Central Pollution Control Board 30mg/ll விட கூடுதலாக உள்ளதால் மேற்காண் 3 இடங்களில்

ரூ48.00 இலட்சம் மதிப்பீட்டில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் UnTied Grand 2020–21ன் கீழ் Dewat System அமைக்கும் பணி மேற்கொள்ள திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு Dewat System அமைக்கும் பணி நடைபெற உள்ள இடம் சரிசெய்யப்பட்டு தற்போது ISAF & SETLLER Screen Chamber, Collection Well Work 2nos , Pipe line work, Motor Erection ஆகிய அனைத்து பணிகளும் முடிவுற்று பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது .

**மனித கழிவு மற்றும் கசடுகள்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பராமரிப்பில், ஆழ்வார்குறிச்சி பேரூராட்சி இணைத்து , இரண்டு நகர்ப்புறங்களிலும் உருவாகும் மனித கசடு கழிவுகளை சுத்திகரிப்பு செய்ய இந்நகராட்சி பகுதி கோட்டைவிளைப்பட்டி சர்வே புல எண் 415 உள்ள உரக்கிடங்கில், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 26888/UGSS-2/2018, Dt:15.11.2018 ன் படி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018–19 ன் கீழ் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் மனித கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையம் தினம் 30 கேல்டி கொள்ளளவு கொண்ட மனித கசடு கழிவுகளை சுத்திகரிப்பு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சுத்திகரிப்பு நிலையத்தில் மே 2021 முதல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு , 2023 ம் ஆண்டு சுமார் 2155300 லிட்டர் கொள்ளவு கசடு கழிவு சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது

கழிவு நீர் வாகனங்களுக்கு உரிம கட்டணமாக ஆண்டுக்கு ரூ.1000 ம் கழிவு நீர் கொட்ட நடை ஒன்றுக்கு ரூ.200 வீதம் வசூலிக்கப்பட்டுவருகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் துணை விதிகளின் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மற்றும் ஆழ்வார்குறிச்சி பேரூராட்சி ஆகியவை மேற்படி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பிற்கான செலவினங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மக்கள் தொகை விகிதாசாரத்தின் படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மேலும் 11 எண்ணம் கழிவு நீர் வாகனத்திலும் ஜிபிஸ் கருவி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படி, இந்நகராட்சிக்கு அருகாமையில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளான சிவந்திபுரம், அடையகருங்குளம், மேல ஆம்பூர், கீழ ஆம்பூர், இரவணசமுத்திரம், பொட்டல்புதுார், திருமலையப்பபுரம், வீரசமுத்திரம் மற்றம் சிவசைலம் ஆகியவைகள் இணைத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, அங்கு உருவாகும் கசடு கழிவுகளையும் இந்நகராட்சி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பிறப்பு மற்றும் இறப்பு

அறிக்கை ஆண்டில் கீழ்க்குறிப்பிட்ட விபரப்படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. பிறப்பு – **7** எண்ணம்
2. இறப்பு – **395** எண்ணம்
3. இறந்து பிறந்தவை – இல்லை.

## ஆடு அடிக்கும் இடம்

இந்நகராட்சி பகுதி ராமலிங்கபுரம் தெருவில் ஆடு, அடிக்கும் இடம் ஒன்று நல்ல நிலையில் சுகாதார வசதியுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## திருவிழாக்கள்

இந்நகராட்சி பகுதியில் உள்ள காணிக்குடியிருப்பு அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழா, மற்றும் பாபநாசம் திருக்கோயில் சித்திரை விசு திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

இந்த திருவிழா காலங்களில் சுகாதார ஏற்பாடுகள் கூடுதல் விளக்குகளும் மற்றும் குடிநீர் வசதிகள் மற்றம் கழிப்பிட வசதிகள் அனைத்தும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## குடிநீர் விநியோகம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் தாமிரபரணி ஆற்றினை நீராதராமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இதனுடைய நீரேற்று நிலையங்கள் தலையணை மற்றும் பொதிகையடியில் அமைந்துள்ளது. இதன் மூலம் விக்கிரமசிங்கபுரம் நகருக்கு தினசரி **45.20**இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியின் **2011**ம் வருட கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **47163** ஆகும். தற்போதைய மக்கள் தொகை **48399** ஆகும். தற்போதைய மக்கள் தொகையின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு **96** லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நகரத்தில் **59.740** கிலோ மீட்டர் நீளத்தில் குடிநீர் விநியோக குழாய்கள் பொருத்தப்பட்டு பிரதான பகுதிகளுக்கும், விரிவாக்க பகுதிகளுக்கும், குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சி பகுதியில் **11789** வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளும், **289** வணிக உபயோக குடிநீர் இணைப்புகளும் மொத்தம் **12078** குடிநீர் இணைப்புகள் உள்ளது. மேலும் **96** கைப்பம்புகளும், **189** பொது குடிநீர் குழாய்களும் மற்றும் **97** சிறுமின் விசைப் பம்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது . பொதுமக்களுக்கு சீரானமுறையில் நாள் ஒன்றுக்கு **96** டுஞஊனு வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது

**நீர்த்தேக்கத்தொட்டிகளின் விபரம்**

| **தரைமட்ட நீர் தேக்க தொட்டி** | |
|---|---|
| வம்பளந்தான் பாறை | 14.30 இலட்சம் லிட்டர் |
| பொதிகையடி | 5.00 இலட்சம் லிட்டர் |
| ஓட்டன்குளம் | 4.00 இலட்சம் லிட்டர் |
| **மேல்நிலைநீர்தேக்க தொட்டிகள்** | |
| டாணா | 3.15 இலட்சம் லிட்டர் |
| பொதிகையடி | 2.00 இலட்சம் லிட்டர் |
| ஆகஸ்தியர்புரம் | 2.00 இலட்சம் லிட்டர் |
| மேட்டுத்தங்கம்மன்கோவில் | 2.00 இலட்சம் லிட்டர் |
| யாணைபாறை | 2.00 இலட்சம் லிட்டர் |
| முதலியார்பட்டி | 0.60 இலட்சம் லிட்டர் |
| மீனாட்சிபுரம் | 1.00 இலட்சம் லிட்டர் |
| இருதயகுளம் | 2.00 இலட்சம் லிட்டர் |
| அய்யனார்குளம் | 0.30 இலட்சம் லிட்டர் |
| கொட்டாரம் | 1.00 இலட்சம் லிட்டர் |

**வீட்டு இணைப்பு கட்டண விவரம்**

வீட்டு உபயோகத்திற்கு ரூ.55/– வீதமும் , வணிக உபயோகத்திற்கு ரூ.110/– வீதமும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. மேலும் புதிய குடிநீர் இணைப்பு வழங்க கீழ்க்கண்டவாறு வைப்புத் தொகைகள் மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

வீட்டு உபயோகத்திற்கு வைப்புத் தொகை ரூ. 3000/–

வணிக பயன்பாட்டிற்கு வைப்புத் தொகை ரூ. 6000/–

| | **கருங்கல் சாலை ரூ** | **தார்சாலை ரூ** | **சிமெண்ட் சாலை ரூ** |
|---|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு 2020–21 | **1801** | **3853** | **4452** |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2021–2022 | **1891** | **4046** | **4675** |
| 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு 2020–21 | **2824.5** | **4877.25** | **5470.5** |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2021–2022 | **2966** | **5121** | **5744** |

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில், இந்நகராட்சி பேரூராட்சியாக இருந்த போது **01.04.2003** முதல் குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகைகள் உயர்த்தப்பட்டு அதே கட்டணங்கள் நாளது தேதி வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட கட்டணத்தை உயர்த்தும் பொருட்டு, நடைமுறையில் உள்ள குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்யவும் இந்நகர்மன்றத்தில் நகர்மன்றத் தீர்மான எண் **265** நாள் **28.03.2023** ன் படி அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மரம் நடுதலும் பூங்காக்களும்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் **2021–22** ன் கீழ் ரூ. **47.00** இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்பகுதியல் சுமார் **427** மரங்கள் நடப்பட்டுள்ளது. மேலும் **15**வது நிதிக்குழு மான்யம் **2021–22** ன் கீழ் ரூ.**4.77** இலட்சம் மதிப்பீட்டில் **1655** மரக்கண்றுகள் இந்நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அம்மா உணவகம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அரசு ஆணைக்கிணங்க கடந்த **2005** ம் ஆண்டு முதல் அம்மா உணவகம் அமைக்கப்பட்டு, நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது. மேற்கண்ட அம்மா உணவகத்தில் மகளிர் சுய உதவி குழு மூலம் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு **12** நபர்கள் பணியில் உள்ளனர், மேற்கண்ட அம்மா உணவகத்தின் வரவு செலவு கீழ்க்கண்டவாறு

**2022–23** ம் ஆண்டு வரவு – ரூ.**730000**

செலவு

1. அரிசி – ரூ. **21600**
2. பலசரக்கு – ரூ.**713718**
3. காய்கறி – ரூ. **450632**
4. எரிவாயு – ரூ. **307920**
5. தயிர் – ரூ. **62500**
6. ஊதியம் – ரூ.**1083000**

மொத்த செலவு – ரூ.**2639370**

பற்றாக்குறை – ரூ.**1909870**

**சொத்து வரிவசூல்**

**2022–23** ம் ஆண்டில், **22354** சொத்துவரி விதிப்பு விதிப்புகளின் நிலுவை கேட்பு ரூ.**39.17** இலட்சம் மற்றும் நடப்பு கேட்பு ரூ.**92.47** இலட்சம் சேர்த்து மொத்த கேட்பு ரூ.**131.64** இலட்சத்தில் **91.76** இலட்சம் **69.71** சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவை இனங்கள் அனைத்தும் அரசு துறை சாந்த கட்டிடங்கள்ஆகும். மொத்த கேட்பில் வசூலிக்கத்தக்க இனங்களில் **100** சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வரி**

தமிழ்நாடு மாவட்ட புதிய தொழில் வரிச்சட்டத்தின் பிரகாரம் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தனியாக தொழீல் நடத்துபவர்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொழில்வரி தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் ரூ.**26.82** இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**குடிநீர் கட்டணம்**

**2022 – 23** ம் ஆண்டில், **12078** எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளில் நிலுவை கேட்பு ரூ.**4.36** இலட்சம் மற்றும் நடப்பு கேட்பு ரூ.**81.21** இலட்சம் சேர்த்து மொத்த கேட்பு ரூ.**85.57** இலட்சத்தில் **85.14** இலட்சம் **99.50** சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அரசுத்துறை சார்ந்த கட்டிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளை தவிற மீதமுள்ள அனைத்து குடிநீர் கட்டணங்களும் **100** சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**காலியிடவரி வசூல்**

**2022 – 23** ம் ஆண்டில், **830** எண்ணிக்கையிலான காலிமணை வரிவிதிப்புகளின் நிலுவை கேட்பு ரூ.**3.82** இலட்சம் மற்றும் நடப்பு கேட்பு ரூ.**7.45** இலட்சம் சேர்த்து மொத்த கேட்பு ரூ.**11.26** இலட்சத்தில் **9.21** இலட்சம் **81.78** சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது

**நகராட்சியின் வரவு செலவு விபரம்**

| Code No | Description of items | Current Year Amount(₹) |
|---|---|---|
| **Income (Revenue fund + Water Supply Fund)** | | |
| 110 | Tax Revenue | 10427829.69 |
| 120 | Assigned Revenues & Compensations | 995181 |
| 130 | Rental Income from Municipal Properties | 128400 |
| 140 | Fees & User Charges | 14839751 |
| 150 | Sale & Hire Charges | 720145 |
| 160 | Revenue Grants, Contribution and Subsidies | 39337121 |
| 170 | Income from Investments | 56800 |
| 171 | Interest Earned | 366179 |
| 180 | Other Income | 3832059 |
| | **Total** | **70703465.69** |
| **Expenditure** | | |
| 210 | Establishment Expenses | 49297717 |
| 220 | Administrative Expenses | 7745732 |
| 230 | Operations & Maintenance | 57153647 |
| 240 | Interest & Finance Charges | 1400851 |
| 250 | Programme Expenses | 848765 |
| 270 | Provisions and Write off | 103787 |
| 272 | Depreciation | 855848.04 |
| 280 | Prior Period Item | -286351 |
| | **Total** | **117119996** |
| | **3109002-Gross Deficit of Expenditure over Income** | **46416530.35** |

**அரசுக்கடன்கள்**

இந்நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் **2020–21** ன் கீழ் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ. **400** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. **360.00** இலட்சம் டுபிட்கோ நிறுவனத்தின் கடனாக பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகைகான வட்டி மற்றும் அசல் தொகை மான்ய நிதியின் கீழ் பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. **31.03.2023** ல் மான்ய

நிதியில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகை ரூ. **3,05,79,372 /–**முழுவதும் சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் **12384/2022/**எல்**2** நாள் **19.04.2023** ன் படி 6th State Finance Commission நிதியின் கீழ் சரிகட்டப்பட்டுள்ளது.

**மின் கட்டணம் நிலுவை**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் கடந்த **2022** ம் வருட இறுதியில் சுமார் ரூ.**2.30** கோடி மின் கட்டணம் நிலுவையாக இருந்தது. நிதியாண்டில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் ரூ.**1.72** மின் வாரியத்திற்கு மின் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு பெறப்படும் மான்ய நிதியின் கீழ் ரூ.**52.00** இலட்சம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி **2023** ம்ஆண்டு பெறப்பட்ட கேட்பு முழுவதும் செலுத்தப்பட்டு, நிலுவை தொகை அதிகரிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தணிக்கை**

**2022–23** ஆண்டின் ஆரம்பத்தில் **180** தணிக்கைத் தடைகள் நிலுவையில் இருந்தன. ஆறிக்கையாண்டு இறுதியில் நிலுவையாயிருந்த தணிக்கைத்தடைகள் கூட்டமர்வின் போது நிவர்த்தி செய்யப்படும்.

அறிக்கையாண்டில் தணிக்கை கூட்டமர்வு **3** எண்ணம் மற்றும் **1** எண்ணம் மாவட்ட உயர்மட்ட குழு கூட்டமர்வும் நடைப்பெற்றுள்ளது.

தணிக்கை கூட்டமர்வில் சிறப்புக்கடிதப்பத்தி **28** எண்ணம் மற்றும் சாதாரண பத்தி **37** எண்ணமும் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட உயர்மட்ட குழு தணிக்கைத் தடை கூட்டமர்வில் **26** எண்ணம் சிறப்புக்கடிதப்பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**ஆணையாளர்**
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

<u>நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

1) நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்கள், சென்னை –– **600 005**
2) நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள், திருநெல்வேலி –– **2**

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/